கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண்  48/2013

பிரதிவாதி தரப்பு சாட்சி – 1 வன்னிமுத்து திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 28.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் பிச்சையம்மாள், ரவி, ரவியின் மனைவி, ரவியின் குழந்தைகள் ஆகியோர் தாக்கல் செய்துள்ளனர். யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் என் மீதும, எனது மனைவியின் மீதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் என்ன பரிகாரம் கோரியுள்ளனர் என்றால் என் சொத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எத்தனை சொத்துக்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் 2 அயிட்ட சொத்துக்கள் ஆகும். 1ம் அயிட்ட சொத்தின் சர்வே எண், பட்டா எண் தெரியுமா என்றால் சரியாக நினைவில்லை. 501 ஆக தான் இருக்கும்.

2. சர்வே எண்.501ன் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் 12 சென்ட் ஆகும். 2ம் அயிட்ட சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சரியாக நினைவில்லை. அதன் விஸ்தீரனம் எவ்வளவு என்றால் ஏக்கர் 1.25 சென்ட் ஆகும். மேற்படி ஏக்கர் 1.25 சென்ட்டிற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் செட்டி பண்னை பெயரில் உள்ளது. மேற்படி நிலம் எனது சொந்த நிலம் இல்லை என்றால் சரிதான். குத்தகைக்கு தான் உளவடை செய்து வருகிறேன். எனது தந்தை பெயர் காத்தான். எனது தாய் பெயர் தெய்வாணை. எனது தந்தை காத்தான் எப்போது இறந்தார் என்றால் சரியாக நினைவில்லை.

3. எனது தந்தை இறக்கும் போது எனக்கு எத்தனை வயது என்றால் 17 வயது. எனது தாய் எப்போது இறந்தார் என்றால் எனது தந்தை இறந்த அடுத்த 2 வருடங்களில் அவரும் இறந்து விட்டார். மேற்படி நிலமானது எனது தந்தை உயிருடன் இருந்த காலத்தில் இருந்து குத்தகைக்கு

அனுபவம் செய்து வந்த நிலம் என்றால் சரிதான். எனது தந்தையும் தாவா சொத்தில் இருந்த வீட்டில் தான் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி எனது தந்தை குடியிருந்த வீடு கூரை வீடாகும். எனது தந்தைக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 7 குழந்தைகள்.

4. அவர்கள் முறையே பாப்பாத்தி, மாரியப்பன், காமாட்சி, பழனியம்மாள், இளஞ்சியம், அய்யனார் மற்றும் வன்னிமுத்து ஆகும். மாரியப்பன் எப்போது இறந்தார் என்றால் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். மாரியப்பனின் மகன் தான் ரவி என்றால் சரிதான். ரவியும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி ரவியின் மனைவி தான் தங்கமணி என்றால் சரிதான். பிச்சையம்மாள் ரவியின் தாயார் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது. இவ்வழக்கின் எதிர் வழக்குரையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும்.

5. எனது சொத்தை யாருக்கும் தர முடியாது என்றும், நான் தான் வைத்து கொள்வேன் என்றும் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். எதிர் வழக்குரையில் உள்ள கைரேகை என்னுடையதா என்றால் இல்லை. வக்காலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான். என் வழக்கறிஞர் முன்னிலையில் நான் தான் கைரேகை வைத்து கொடுத்தேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதா என்றால் என்னுடையது தான். நான் தான் எனது வழக்கறிஞரிடம் நீதிமன்றத்தில் வைத்து கொடுத்தேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**